செய்தி வெளியீடு நாள்.12.9.2007

# வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 9.80 கோடி ரூபாய் செலவில் 231 புதிய வாகனங்கள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

தமிழகம் முழுவதும் ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில், வருவாய்த்துறையின் மூலமாக இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் திட்டம், இலவச கேஸ் அடுப்பு வழங்கும் திட்டம், விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டம் மற்றும் முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகையத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்திடும் நோக்கில் மாநிலமுழுதும் 201 வட்டங்களில் தனி வாட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) செயல்பட்டு வருகின்றனர். மேலும், தமிழக அரசின் சார்பில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடும் திட்டப் பணிகளை 30 மாவட்டங்களிலும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடங்களில் தனித் துணை ஆட்சியர்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

அரசின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துதல் மட்டுமின்றி, மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை விரைந்து களைந்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவிடும் வகையில், சமூக பாதுகாப்பு திட்டத்தில் பணியாற்றி வரும் 201 தனி வட்டாட்சியர்களுக்கும், இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கிடும் திட்டப்பணியிலுள்ள 30 சிறப்பு துணை ஆட்சியர்களுக்கும் ஏறத்தாழ 9 கோடியே 80 லட்சத்து 23 ஆயிரத்து 781 ரூபாய் செலவில் 231 புதிய வாகனங்களை வாங்கி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில், முதற்கட்டமாக 171 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

அண்ணா நினைவிடம் அருகில் இன்று (12.09.2007) காலை 10 மணியளவில் நடைபெற்ற எளிய விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புதிய வாகனங்களை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, தலைமைச்செயலர் திரு. எல்.கே. திரிபாதி. இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலர் திரு. அம்புஜ் சார்மா, வளர்ச்சி ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு. எம்.எப்.பரூக்கி, இணைஆணையர் திரு . து. இராசேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.